JAFFNA COLLEGE LIBRARY
SEP 14 1942
VADDUKODDAI, CEYLON

# THE young idea

JAFFNA COLLEGE 1872 CEYLON

# இளஞாயிறு

A STUDENT FORTNIGHTLY OF JAFFNA COLLEGE

FOR PRIVATE & INTERNAL CIRCULATION ONLY

| Vol. VII | Wednesday - 19th, August 1942 | No. 5 |
|---|---|---|

| | | | page |
|---|---|---|---|
| JAFFNA COLLEGE, THEN AND NOW | — | *R. Shanmugaratnam* | 2 |
| SNAPSHOTS TAKEN AT THE INTER HOSTEL ZOO | | *"Teddy"* | 3 |
| HERE ARE THE MATRIC RESULTS | — | *K. Palasuntharampillay* | 4 |
| ON GETTING A TOOTH EXTRACTED | — | *'Jegatheesan'* | 6 |
| உடன்கட்டையேறிய உத்தம நட்பு - II | — | "ஈஞு" | 10 |
| இன்பக் காட்சிகக் கிறுதியிட்ட சர்ப்பம் | — | *S. Thanapalasingam* | 12 |

A. F. TAMPOE
English Editor.

N. S. RATNASINGHAM
Tamil Editor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eng. Editorial Board

**Editor :**

A. F. Tampoe

**Associate Editors :**

K. Palasunthrampillai

T. M. Ponniah

*Literary Section :-*

G. N. Vijayaratnam

*Sports Section :-*

C. Paramjothy

*Co-eds. Section :-*

Miss. T. Navaratnam

Miss. E. Niles

*Junior Section :-*

K. Balasuntharam Pillai

K. Balaraman

*Faculty Adviser :-*

Mr. C. A. Gnanasegaram, B. A.

## Tamil Editorial Board

**Editor:**

N. S. Ratnasingham,

**Associate Editors**

K. Sathasivam, Inter Sc.

G. N. Wijayaratnam Jr. Inter Arts

*Literary Section :-*

K. Jagatheesa Ayyar, Lond. Matric

*Verse Section :-*

M. Thambimuththu, Lond. Matric

*News Section :-*

K. Alagaratnam, Lond. Matric

N. R. Balasingham Fifth Form A.

*Co-eds. Section :-*

Miss. S. Amerasingham, Jr. Inter Arts

Miss. P. Somasundaram, London Matric

*Sports Section :-*

S. Kanagaratnam, Lond. Matric

*Junior Section :-*

A. Kugarajah, IV-th Form

R. Ratnasingham, Fifth Form A

*Faculty Adviser :-*

P. Navaratnam, M.A.

Cover Design by 'Sana' of the Eelakesari.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIB
SEP 14 1942
VADDUKODDAI, CEYL

# The young idea

A STUDENT FORTNIGHTLY OF JAFFNA COLLEGE

*FOR PRIVATE & INTERNAL CIRCULATION ONLY*

**Vol. VII** | **Wednesday - 19th August, 1942** | **No. 5**

## Editorial Notes

### Health Week

"WHAT means this eager, anxious throng
Which moves with busy haste along—
These wondrous gatherings day by day,
What means this strange commotion, pray?"

Three days they came, they saw, they wondered.

In and out of the various stalls the seemingly endless dream of admiring fair-goers drawn from every part of Jaffna wound its surprised way.

Intricate needlework painstakingly executed by ingenious hands, paper produced locally for every purpose, original drawings and paintings from schools and individuals, lectures on health for everyman, plays, singing, practical demonstrations of practicable Food Production, African tribal dances in the moonlight to the rhythm of soul-stirring war-drums, amazingly untiring feet beating a twinkling tattoo around the campfires light to the accompaniment of rich deep Kaffir voices rising and falling in thrilling harmony, all the unforgettable pictures that a large holiday crowd provides—this is what they saw at the great Hyde Park, I mean Walikamam West. Exhibition. And the man behind it all was our Mr. Vethaparanam, the Moving Spirit of the show. Hats off to him, all ye patrons of Local Industry!

* * *

### Y. M. C. A. Refreshments

BUT as far as we boys were concerned, the stalls and the other items provided were but a means of whiling unwilling time away till four o' lock every evening. And what happened at four? At four, we all hastened hurry-scurry, helter-skelter by every possible route to the Refreshment Buffet run by the Y.M.C.A. girls, and then in chorus we all screamed for ice-cream! We buried our thirsty faces in cool, delicious' water-melons, and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

literally swarm in sparkling glasses brimful (??) with multi-coloured iced fruit-drinks. Our teeth sank into scrumptious cakes, into Y. M. C. A. Factory Toffee which clung lovingly to our gratified molars!

O that Exhibitions were held every day!

* * *

**Matric Successes**

Jaffna College scored 27 passes in the January 1942 Matriculation Examination—of which no less than 7 were First Divisions.

The Inter-Science class this year is unique in that it contains more First Divisions (some 11 in all) than ordinary matriculates. Keep it up, Jaffna College.

* * *

**Editor's Own**

The Editor's thanks are due to Master K. Palasuntharampillay who in his novel style edited the last two issues of the "Young Idea" while the Editor was away on leave trying to recover from the effects of the Intermediate Entrance Inquisition.

We wish you all a Happy Holiday.

# Jaffna College then and Now

*R. Shanmugaratnam, President, School Council*

[*A viewpoint for which the author alone is responsible, but which may well make us pause to consider* —*Ed.*]

A lapse of three years is long enough to bring about many changes. The first that caught my eye was the new administration block. This "block" seems to my eye to be ill-situated. It is somehow out of place. It does not synchronise with its surroundings. It is among other buildings and yet stands out. Its architecture I cannot fix. The trend in the architecture of most modern buildings is to denote efficiency. But this building does not show it. Neither does it please the eye. The inside, however, is not very displeasing though it does not make up for the outside. The choice of rooms for the various purposes does not seem to be very happy.

The Bicknell Field more than makes up for the displeasure caused by the administration block. Though the field is yet to reach the peak of its beauty when viewed from behind the Principal's bungalow, it gives an impression of that roominess, which one wants for students to kick themselves out of breath. Save for the fairly hard blowing, which can be stopped easily, by growing large trees in the way of the wind, the field is all that one can desire for Jaffna College.

The changes in the entrances and exits did not set no thinking, for the way you get in or out does not really matter much especially because for the walls are low and our legs are long. The differences between the old and the new Inter Hostel pain me very much. While the one was roomy, airy and cool, the other is stuffy and warm. Besides, what is worse, while the one was in a secluded spot, with no ears near about to listen to the din we cannot but sometimes make, the other is almost in the centre of College life with many willing ears near enough—so willing that they had even the splash of water used for ducking.

We miss, of course, the shower baths, and in which, the prospectus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

told us, boys wet themselves gleefully. The changes in religious education did not come as a surprise after the hallabaloo that was created over "denominational schools"

Among the changes, that struck my mind, and which must necessarily be more important, is the slight change in the tone of the College. The air smells a little of authoritarianism and of the ashram. Where once students let themselves go assured that no fellow student would sneak, now they will not let any save their trusted comrades know of their doings. Students refrain from kicking over the traces more through fear of punishment than through the knowledge that they be trusted. The Hostels lack virile spirit. Changes, innovations, withdrawal of privileges, all these are taken for granted. Student is playe l off against student. Protest has left the campus and gone into the School Council where too it is feeble and ineffective. The School Council is being jockeyed from being the mouth-piece of the student body into becoming part of the administrative machine. Somehow or other all feel restricted. We miss the freedom that once enveloped us.

One aspect, however, pleased greatly. That is the growing sense of confidence and mutual understanding between students of the different sexes. While it certainly is yet a day long way off from the ideal, it is true that we are making for it. The good ladies are beginning to get over the bondage that is their inheritance and the honourable gentlemen the shyness, which they have been taught to believe is the mask of a "good boy". Time was when for a boy to talk to a girl was improper; but now, though these yet are some fossils who look askance at such "innovations", the outlook is changed. It is beginning to be realised that we are first students and then boys and girls.

# Snapshots taken at the Inter Hostel Zoo

*"Teddy"*

1. **Visuvappu:**—Father of the Hostel, patronises No. 1 quality golden snuff (with ghee), waxing romantic with waning of the moon—"lunatic" effects. During the Health Week he was generally to be found in the vicinity of the refreshment stall, more absorbed in gazing at the fair waitresses than in consuming what they provided. As his body is running to adiposity, he has an almost motherly look now, sings "Fight the good fight" with all his might in a high falsetto.

2. **Retnamman:**—Visvappu's brother-in-girth. Glamorous in his grandfather's pair of buck-and-tan shoes and trousers bagged from some stray Chinaman. When studying about magnets and their field, he was heard to remark that Indian female magnets diffuse their rays of attraction over an incredibly wide field. When he laughs, although he produces a peculiar roaring sound like the bull-frog in the well near the Power House, and although his whole bulk quivers and shivers, his face remains quite expressionless and almost dismal. Supplies the Inter Hostel with cuticura powder and Victorian songs e. g. 'the Isle of Capri', and 'Sweet Rose Marie'. Entered for the "Eating Contest" held recently; in spite of spending hours in the literary reading reference works on "Appetite Development," and in spite of fasting the whole of the previous night and morning, he came last thus disappointing the high expectations (based on his immeasurable waist-line) of the fair onlookers.

3. **Ganja:**—The great Rabbit-Hunter, hailing from the wilds of the North, the smugglers' paradise; possesses a queer hopping gait, which has aroused the amused and surprised comments of many. Gives tuition in Applied

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Maths to the whole Hostel, but scored considerably less marks than his pupils in a recent test. Very fond of proposing toasts of councillors. Dresses faultlessly in immaculate Singapore high tide pantaloons, strongly similar to the large scale bamboo tests-tubes in which rice "concrete", is prepared for the morning consumption of the Boarders. Hero of many ballads compressed and sung to a variety of tunes by Retnamman and Co.on every possible occasion.

4. **Lingoose:**—Sported his wedding suit (stitched long in anticipation of that unhappy event !!) during the Health Week. Narrowly escaped execution for suspected conspiracy. He has his origin in mid-Peninsula. Possesses a "dynamics" personality. A great ex-Peterite "athletics" though fortunately he does not own a single trophy. "Passed away" the Matric in the 1st Division, and himself suspects the London Examinees of being either inebriated or overflowing excessively with the milk of human kindness to have perpetrated such an unpardonable oversight. Martyr to chronic "NOSAL" catarrh, which he tries to relieve by constant expeditions into Visuvappu's snuff box.

5. **Bala the Bogus:**—Is an Inter Science (in Lingoosean phraseology), and is mainly gas. Like Retnamman, is a specimen from a sister College. Although amazonian-chinned, he tries to make out by his bluster that in the 19 years of his long life, he has seen the world and is tired of it. Walks like a crippled Clark Gable. Finances the other usually bankrupt Hostellites on their "sprees". If Retnamman is the powder agent, Bala is the soap stockist. A jolly good fellow all the same, in spite of his gasiness.

6. **President Baby Chandra:**—Lingoose's compatriot and 'one-left brother'. Popular in his boyhood at St. Patrick's and now popular in his manhood at Jaffna College. Contests with Visuvappu the seniority of the Inter Hostel. Conceived a chill while chaperoning Cinema-goers and now confined of a Chest Cold.

# "Here are the Matric Results..."

*By K. Palasuntharampillay*

*[In this, the fourth sketch in the series "College Life", the author plunges into an interesting analysis of minds.]*

"See; the Junior Inters are making a march to the Post Office. The Matric. results are out."

"When were the results out?"

"Some received telegrams yesterday. They are going, expecting more telegrams."

The conversation was between Kandiah and Pookailas. The former seemed to be one of the all-knowing wise-men of old Athens and Pookailas did not see any reason why he should doubt him. He took it as a matter of course for some time, for he was expecting a pass.

"Congratulations on your securing a first division," greeted Rajah with an outstretched hand. Pookailas had not the slightest doubt but that Rajah was fooling him. With a smile which told plainly that he knew Rajah was lying Pookailas clasped the outstretched hand and held it for some time. Both of them knew that the other was pretending; yet they continued to keep up the pretense for some time.

"Congrats on your pass." This was addressed to Kandiah and the speaker was Rajah.

"A third division pass!" corrected Kandiah with a laugh. And the laugh was a sincere, not an affected one. Anyone who had looked at Kandiah at that time would have vouched for it. Kandiah's laugh was a sincere one. And he did not seem to be grieved by

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

the news—of course Kandiah knew that Rajah was joking and that he had failed. But how did he know it? And why was he not grieved by the news? Pookailas was puzzled. Here was a creature, and a human being at that, who did not feel sad at his having failed in his examination. A shade of doubt as to Kandiah's sincerity went through Pookailas's mind: was he pretending too? He looked at Kandiah, perhaps thinking that he could thus analyse his mind and solve the problem.

Perhaps Kandiah understood by some mysterious way what Pookailas was thinking. They had for some minutes stayed near the Post Office. Now they began to move slowly towards the College. Pookailas sensed that his friend had read his mind and that he was going to explain his conduct. He was ashamed of his thoughts; perhaps they were unjustified?

"I knew that I would fail; I didn't do well in the exam." There was a pause: Pookailas thought that Kandiah's explanation was over. But he realised his mistake pretty soon when Kandiah said, "I know that I would fail. So there is no reason why I should be sad now." It cannot exactly be said whether the last sentence was a question or a statement. And before Pookailas could clear his doubts on that point Kandiah was heard to say, "Our results have not yet come; Rajah was fooling. But I know that I would fail."

After another pause Kandiah resumed. "If a fellow has not done well in the exam. and had not worked for it, there is no reason why he should be sad. Only if his labour goes unrewarded, could he have any reason for being sad." There was still another pause and then Kandiah said, "I am sad"

Pookailas felt that logic did not have any connection with emotion; that logic does not command emotion. Although there was no justifiable reason in logic why a person who had not worked for an examination should be sad when he failed, yet it was normal to be sad. Then again why were there pauses at certain points in Kandiah's speech, and why had he stressed that he was not sad? Was he not trying to deceive himself if not others? Was he not consoling himself?

Kandiah and Pookailas went their ways each to his class. Pookailas, in his attempt to analyse the mind of Kandiah, had forgotten his fate. Now he was very, very anxious about his 'results'. Sure, he was anxious. Anyone who had looked at Pookailas that morning in class would have said that he was restless and not attending to his lessons. The teacher went on reading aloud the text-book, and Pookailas, almost throughout the period, went on looking at the verandah. He was waiting for the telegram which would give the 'results.'

It was nearing the end of the period and still the teacher has not given up reading the text-book, nor had Pookailas taken his eyes away from the verandah more than once or twice during that entire period. 'Why are the boys crowding there? Yes, they are looking at a telegram, and there are smiles, happy ones certainly, on the faces of many of them. 'Have I passed the Matric? Could I have got a first division?' These thoughts instantly flashed into Pookailas's mind as he saw some boys reading a telegram just delivered.

'D—this fellow reading the text-book at this time. We must know our results now.' But no amount of cursing in Pookailas's mind would make the teacher give up reading the text-book and ask him to go and find out the 'results. Yet we must not forget that there is God to set aright human injustices. The bell rung, and the period was over. Pookailas, disregarding the class and the teacher, dashed across to the bulletin-board where a miniature crowd had gathered. "SEVEN FIRST DIVISIONS INCLUDING POOKAILAS!" Pookailas was very, very happy. (Now let us ask you reader, 'Can happiness be lasting?")

"Congratulations", and handshakes, and pinches showered on Pookailas and he lived happily.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ON GETTING A TOOTH EXTRACTED

*'Jegatheesan', Sr. Inter Science*

I had a tooth projecting from the upper gum. It was created to serve no useful purpose. Being much above the other teeth of the upper row, it had nothing to do with the biting and the chewing. Long and sharp it was, more canine than human. I was quite convinced that it served no purpose other than to mar the handsomeness (?) of my face. I could not smile; because when I smiled, out it projected and I was conscious of that idiotic thing (what? smiling an idiotic thing or my tooth?). I had to repress the smile, and in doing that I twisted my lips and made all sorts of unwanted facial contortions. At home or away, I had to be extremely cautious of this great disaster, i.e. smiling, into which, at any moment, I might be unconsciously led. I had come to the conclusion that the best thing was not to smile at all.

While children we used to have a game in which one sits in front of another, and smiles, grins, laughs or does the most funny things possible while the other should watch him without smiling, without moving even a muscle of his face. It was always this sort of game with me. Why people should show their teeth when they were happy was a thing I can't understand. From baby-hood it is so. Even a baby a few months old broadens it lips and wants to show its teeth (only it has no teeth to show?) when it is in joy, but cries and lengthens its face when it is in discomfort. Why should it not be *vice versa*. Especially why should I, who have an ugly dog's-tooth, want to show it to others when I am amused. At last I got so irritated that I desired to have the thing pulled out. Gripping it fiercely with my fingers, I tried with all my strength to jerk it out of its place but there it stood firm and tight, unshakable. I wound a strong string round it and pulled at the ends with all might, but in vain.

I thought of a way of exerting my whole weight on the tooth: I stood upon a chair and suspended that string, still passed round my tooth, to the beam of the verandah. I kicked the chair away, and into the air I swung, executing 'simple harmonic motion' like a pendulum. After many oscillations and much neckstrain, the string broke to my utter dismay and I alighted on the cement floor with inconvenient velocity. I slowly got up and limped away to a corner; I felt my tooth; it was unshaken as ever, and it only gave me fresh pain to experiment on it further.

Having satisfied myself that all these attempts were of no avail, I thought of those whose profession it is to attend to such matters. One auspicious day (the gods having willed it so,) I cycled to town and got down at "Thosdo.........." Licensed Dentist and Optician. With unwilling steps I entered the drawing-room and sinking down into a chair expected the arrival of the dentist and the passing of the final sentence. In a few minutes he appeared and I acquainted him with the trouble, which had vexed me for years. I wanted the tooth to be filed down. He insisted on its being completely pulled out. I pleaded that it was the opinion of the doctors that pulling it out would affect my eyes. He got wild. "Which doctor fellow told you that?" he demanded. "I say that the thing has nothing to do with the eyes, nose or ears." I further pleaded that it would cause me much pain.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" We guarantee absolutely no pain. (I was sure that he could do this only after my death!) We do it by an electric method, quick as lightening. We have got a new painless method; no other dentist in Ceylon has it, we got it specially imported from America ........." At last I succumbed and suffered the verdict to be passed on my tooth Straightaway he applied some medicine (which made me feel nauseated) preparatory to the operation, and asked me to wait half an hour. At the expiration of this most cruel period of suspend, he called me into the Chamber of Horrors. There in huge glass cases were white shining implements which vouschafed death to that species of things called 'teeth'. At one end of the room stood a high throne which was red cushioned all over. Was it a guillotine or an electric chair? I examined it to see if any electric current could be circulated through it. Before I could complete my examination, he motioned me into the chair. I got upon it and was rather enjoying it (a comfort amidst pain) when he returned with a long needle forced my mouth wide open and at one stroke inserted the end of the pin deep into the gum of my tooth ("absolutely no pain", he had said, and how dare he inflict such tortures) After a few moments he drew it out, and this relieved me not a little; but, what was my horror, when he again injected the needle into another side of the tooth. Thus after several such injections around the tooth, he left me for a time Then he returned with a pair of pincers at the sight of which I closed my eyes; and, while his assistant pressed down my forehead, he held the tooth tightly with his pair of pincers, and pulled it out with one mighty effort. After applying the necessary medicine, "How handsome you look now" he said and gave me a mirror. I felt highly gratified at his compliment (what man is there who is not touched by a genuine admiration of his handsomeness?) and viewing myself in the mirror found to my great joy that the projecting, canine tooth was no longer there. The dentist placed in my hand something which was wrapped in a tissue paper. I opened it. It was my tooth. He asked me to take it and have it as a remembrance. "Wicked, internal tormentor, born of stone, thou wast a thorn in my mouth; and now, among the stones shalt thou lie where I return thee". So saying, I flung it away at the entrance, while leaving the dentist's dispensary. After that I felt a little contrition and wished I had brought it home and had it preserved like Buddha's tooth.

# For & Against the Caste System

*by Tam O' Shanter*

*Scene:* A toddy tavern. Seated, two F. M. S. pensioneers on their pay day with tumblers in their hands. Full of the wisdom consequent on taking "one over the eight", they discourse on topics of current interest. Having exhausted, the possibilities of the war they are silent for a space. At length, overflowing with alcohol—diluted milk of human kindness, Shanmugam breaks the silence:

" Why should the noble fellows who bless mankind, by tapping the Gracious Palm for this liquid, be treated with such contempt as Pallah dogs?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

His boon and boozing companian Thungam, a thoroughbred Tory in these matters, replies:

"The Caste System is a custom which has lasted through generations. And it must be a good custom, seeing that it has lasted so long. Who are we to meddle with these old-established customs? There will be nothing left worth living for in the world if all the old traditions were to be abandoned one after another.

*S:* We must not be hide-bound by convention. The old order must change "lest one good custom should corrupt the world."

*T:* (With only a hazy notion in his drink-befuddled brain as to the meaning of this paradoxical maxim). Mmm......What you say is true in a way. But if we did away with caste distinctions, who would do the various objectionable forms of work now formed by the respective castes. For instance, work like scavenging —who is going to volunteer for such a distasteful and nauseating task?

*S.* When the great revolutionary changes of the world were undertaken, the participants did not worry about any temporary dislocations that might take place. Temporary inconvenience must not be permitted to stand in the way of permanent, lasting reform. First abolish the evil. Some solution will be found.

*T:* But what about the சாதிப் புத்தி? It is engrained in the bones of the low caste. No doubt we—shouldering the responsibility that rightly belongs to our forefathers who established this system—we are to be blamed for causing the moral and spiritual degeneration of the low-caste.

But the fact is that it is there. There is no getting past that.

*S:* There is no such thing as சாதிப்புத்தி. Even if there is, the innate good nature of man will ultimately triumph in combination with the giving of equal opportunities to all.

[Here Shanmugam is seized with a fit of hiccups which temporarily, holds up his edifying moralizations and gives a chance to Thungam who has been struck with the idea of what he thinks to be an unanswerable argument.]

*T:* Shanmugam, will you marry a ஈனத்தி?

*S:* Er..........but.........

*T:* (triumphantly) There you go with your buts. Your reforms are all theoretical. When it comes to the practice of your precepts, you recant and draw back. You are all a set of humbugs......That's what you are......Hic..... hum......hic...... bugs!

*S:* Now, now, don't bring forward such crude arguments. There is no reason why one should go out of one's way to search for and wed a low-caste. But, to answer your argument, if the girl is suitable in all other respects, caste is no barrier.

Do you not see that if ever we are to unite to win our independence, the only way is by first destroying all social barriers. The fact of a man's being born into a low-caste family does not render him incapable of being just as useful a citizen as you or I. These petty prejudices must not.........

[He breaks off here—for his audience is fast asleep, lulled to slumber by alcohol and profundity of his friend's remarks!]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞாயிறு

யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர் வெளியீடு

JAFFNA COLLEGE L
SEP 14 194
VADDUKODDAI, CEY

| புத். 7 | சித்திரபானு௵ ஆவணி௴ ௧௨ புதன்கிழமை | இல. 5 |
|---|---|---|

# பத்திராதிபர் குறிப்புகள்

## இல்லாமையிற் காலதாமதம் நன்று

அக்கினி பகவானுக்கிரையாயிற்றோ அன்றி ஆழ்கடலதை விழுங்கிற்றோ என்று மாணவர்களெல்லோரும் பேசிக்கொண்டனர். தைமாதம் எடுத்த நாற்பத்தொரு ரூபாய்ச் சோதனை (London Matriculation) யின் மறுமொழியின் வருவழியைப் பார்த்துச் சோதனையெடுத்தோர் கருவிழிகளெல்லாம் களைத்துப் போயின. ஆனிமாதச் சோதனையும் வந்துசென்றது. தையிலெடுத்தோரனேகர் அதனையுமெடுத்தனர். ஆனற் தைமாதச் சோதனையின் மறுமொழி மூடுமந்திரமாகவே யிருந்தது. மேல்வகுப்பிற் சேர்ந்து படிக்கப் பலருக்கு மனந்துணியவில்லை. மறுமொழி தம் எண்ணங்கட்கு மாறுபாடாய்வரின் மேல் வகுப்பிலிருந்து 'மட்ரிக்' வகுப்பிற்குத் திரும்பிவர நேரிடுமேயெனப் பயந்தனர். கல்லூரி நடாத்துவோரும் இம்மாணவரை (சித்தியடையக்கூடிய) வகுப்பில் விடுவதென அதிகதூரஞ் சிந்தித்தனர், காலதாமதமேற்பட்டமையால் இவ்வளவு கஷ்டங்களும் உண்டாயின.

மறுமொழிக் கடதாசிகள் சேரவேண்டிய இடத்தைப் பத்திரமாய்ப் போயடைவதற்கு எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களே காலதாமதத்திற்குக் காரணமாகுமெனக் கூறப்படுகிறது. பகைவனின் தாக்குதலுக்கஞ்சிக் கப்பல் பதுங்கிப் பதுங்கிப் பலவிடங்களிலும் தங்கித் தங்கித் திரைகடல்களைத் தாண்டியிருக்கவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

காரணமெதுவாயிருந்தாலுமென்! "இல்லாமையிற் காலதாமதம் நன்று" என்ற ஆங்கில முதுமொழிப்படி (Better late than never) இல்லாமலே போய்விடாமல், காலதாமதமாகியும் வந்து சேர்ந்ததேபோதும். இவ்வண்ணம் பலவித கஷ்டங்களையுண்டாக்கும் காலதாமதம் இனிமேலுமேற்படாமற் கல்வித்துறை அதிகாரிகள் கவனிப்பார்களென நம்புகிறோம்.

## ஆரவாரமிகு சுகாதாரவாரம்

அரசாங்கத்தாரால் சுகாதாரமெனக் கணிக்கப்பட்ட இவ்வாரம் எங்கும்மிக ஆரவாரத்துடன் அவதானிக்கப்பட்டது. பொருட் காட்சிகளும் உபந்நியாசங்களும் அதிகமாக எல்லாவிடத்து நிகழ்ச்சிகளிலும் பிரதான அங்கங்களாயிருந்தன.

எல்லோரும் நோயற்ற வாழ்வு நடாத்திக் குறைவற்ற செல்வராக வேண்டுமென்றதே இச்சுகாதார வாரத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகள் உபந்நியாசங்கள் காட்சிகள் முதலியன மூலம் பொதுஜனங்கட்கும் மாணவர்கட்கும் போதிக்கப்பட்டிருக்கின்றன.

சுகாதார வாரத்தைச் சந்தோஷமாயும் எழுச்சியுடனும் கொண்டாடுவதற்காக எடுத்துக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரங்களைமட்டும் கவனியாமல் ஜனங்கள் போதிக்கப்பட்ட வழி வகைகளை நடைமுறையிற் கொண்டு வர முயற்சிக்கவேண்டும். போதனைகளைக் கேட்டு வடிவாக விளங்கிக் கொண்டாற் போதாது. போதனைகளைச் சாதனை முறையிற் கொண்டு வரவேண்டும்.

சுகாதார விதிகளே போதிக்கப்பட்டன. சுகாதாரவிதிகள் நோய்களை மாற்றுவன அல்ல. சுகாதார விதிகள் நோய்கள் வராமற் தடுக்கும் முறைகள். அபாயம் வந்தபின் அவதிப்படுவதிலும், வராமற் தடுப்பதே சிறந்த முறையாகும். இச்சிறந்த முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து போதிக்கப்பட்ட முறைகளை ஆதாரமாக வைத்துச் சுகதேகிகளாய் நோயற்ற வாழ்வு நடாத்த எல்லோரும் எத்தனிக்க வேண்டுமென்பதே இவ்வாரத்தின் பேரால் நாம் கேட்கக்கூடியது.

---

# உடன்கட்டையேறிய உத்தம நட்பு - II

by "ஈனு"

[சென்ற இதழில் இதே தலையங்கத்தின்கீழ் இலக்கியத்திடை காணப்படுமோர் சம்பவத்தைப்பற்றிக் கூறினேம். இம்முறை சரித்திரத்திடை காணப்படுமின்னுமோர் சம்பவத்தை இதே தலையங்கத்தின் கீழ்க் கூறுகிறேம்.]

அரசன் காசியப்பன் தந்தையைக் கொன்று தனக்கு அரசாட்சியைத் தானே தேடிக்கொண்டனன். பழிக்குப்பழி வாங்கக் கங்கணங்கட்டிக்கொண்ட காசியப்பனின் சகோதரன் முகலன், பிறர் உதவியுடன் தமையனைக் கொன்று தான் அரசனானன். இவனுக்குக் குமாரதாசன் என்று ஓர் மகனுண்டு.

தன் மூதாதையரைப் போலன்றி இவன் மிகவும் சாதுவானவன். மற்றரசர்கள் போர்த்திறமையினாற் தம்புகழை காட்டியிருக்கிறார்கள். புகழ்பெறுவதற்காக மற்றரசர்களை ஒவ்வோர் அரசனும் பணியவைக்க முயல்வது சரித்திரமறிந்த உண்மை. ஒரு அரசனின் திறமை அவன் ஈட்டியுள்ள வெற்றிகளினின்றே கணிக்கப்பட்டது. மகா அலெக்சாந்தருக்கும் அவ்வண்ணமே புகழ் உண்டாயிற்று. ஆனால் குமாரதாசன் தன் அன்பின் சக்தியினாலேயே சரித்திரத்தில் நல்லிடம் பெற்றான்.

குமாரதாசன் உள்ளம் புலமையுள்ளம், அவன் கடூரச் செயல்கள் செய்யத் துணியாத ஒரு கவி. கவியியற்றுவதில் விவேகி. ஒருநாள் தெருவழியே போகையில் அவன் மனத்தில் ஒரு பா உதித்தது. உடனே அப்பாட்டின் இரண்டு வரிகளை ஓர் வீட்டுச் சுவரின் வெளிப்புறத்தில் வரைந்தான். குறையில் விடப்பட்ட அப் பாவை நிறைவேற்றுவோர்க்குப் பெரும் பரிசில் வழங்குவதாகவும் அச்சுவரின்கீழ் எழுதிவிட்டு ஏகினன்.

குமாரதாசனாட்சிக் காலத்தில், காளிதாசன் என்று ஓர் வரகவியிருந்தான். இக்காளிதாசன், இலக்கியம் போற்றும் இந்தியக் கவிஞன் காளிதாசனாகவிருக்கவுங்கூடும், அன்றி இலங்கையிலதே காலத்தில் அதே பெயருடன் வேறு காளிதாசனிருந்திருக்கவுங்கூடும். ஏனெனில் இச்சம்பவம் மாத்தறையிலேயே நடைபெற்றது. எக்காளிதாசனாயிருந்தாலுமென்? இக்காளிதாசன்—அந்நேரமிலங்கையிலிருந்த கவி காளிதாசன்—அரசனின் ஆப்த நண்பன். அரசனும் கவி காளிதாசனும் மணியும் ஓசையும் போன்று ஐக்கியமாய் வாழ்ந்துவந்தனர். இருவரும் அன்பெனும் தளையாற் பிணைக்கப்பட்டிருந்தனர்.

குறையில் விடப்பட்ட கவியை அவ்வழிச்சென்ற காளிதாசன் கண்ணுற்றான். குறையை நிறைவேற்றினான். அவ்வீட்டு மனுஷி இவைகளெல்லாவற்றையும் அவதானித்தாள். பண ஆசை அவளை ஆட்கொண்டது. மனுஷிக்குகந்த குணங்கள் ஒழி மறைந்தன. பணப்பேயானாள். அரசனிடமிருந்து வெகுமதியைத் தான் பெற [illegible] ஓர் பயங்கரமான முறையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டனள். புலவன் காளிதாசனை வஞ்சனையாய்க் கொன்றனள்.

பின் அரசனிடஞ் சென்று, தானே அப்பாட்டை நிறைவேற்றியதாக ஒரு பொய்கூறி வெகுமதியைப் பெற்றனள். பண ஆசை, கொலையையும் பொய்யையும் அவளிடை ஜெனிப்பித்தது. இக்கேடான முறைகளைக் கையாண்டு வெகுமதிப் பணத்தை அவள் பெற்றாள்.

அரசனுக்கு இது நம்பக்கூடிய ஓர் விஷயமாகத் தோன்றவில்லை. அம்மனுஷி அப்பாட்டை நிறைவேற்றுதல் அசாதாரணமான அலுவலென்று அவன் எண்ணினான். இச்செயலில் ஏதோ மர்மமடங்கியிருக்க வேண்டுமென்று ஊகித்தான். வேவுகாரரை, இவ்விஷயத்தைத் தீர விசாரித்து அறிவிக்குமாறு ஆக்ஞாபித்தான். வேவுகாரரின் சாமர்த்தியத்தின் விளைவாக உண்மை புலப்பட்டது. இப்பரிதாபகரமான செய்தியையும் காளிதாசன் உடலையும் அவர்கள் அரசன்முன் கொணர்ந்து வைத்தனர்.

இனிச் செய்வதென்ன? அரசன் துக்க சாகரத்திலாழ்ந்தான். கரையேற வழிகாணமற் பரிதபித்தான். காளிதாசனின் உடல் அக்கினிதேவனுக்கு அர்ப்பணமாகிக்கொண்டிருந்தது. அரசன் தன் துக்கத்தைத் தீர்க்க அக்கோர் வழியைக் கண்டான். நண்பனுடலுடன் தன்னுடலையும் அக்கினிக் கிரையாக்கவே அவன் கண்டவழி. நண்பனைப் பிரிந்து உயிர்வாழ அவன் விரும்பவில்லை. நண்பனுடலை எரித்துக்கொண்டிருந்த அக்கினியில் வீழ்ந்து உயிரை மாய்த்தனன். உத்தம நட்பினால் உடன்கட்டை யேறினான்.

# தியாகம்

[தியாகமே வாழ்க்கை. தியாகமில்லாவிட்டால் உலகமேயில்லை. பெற்றோர் தம்மைத் தியாகஞ் செய்தே மக்களை வளர்க்கிறார்கள். மேகம் தன்னைப் பொழிந்தே உயிர்களை வளர்க்கின்றது. பூ தனது மணத்தைக் காற்றிற்கும், மதுவை வண்டிற்குமளித்துப் புன்னகை பூக்கிறது. விளக்குத் தன் நெய்யுந் திரியும் செலவழிந்தாலும் வெளிச்சம் தருகிறது. மரம் தன்னை வெட்டித்துண்டு போடும் மனிதருக்கு நிழலும் கனியும் அளிக்கிறது. இந்தமாதிரி மனிதர் தியாக புத்தியுடன் தம்மை அருட் பணிக்கே பலிதானமாக்க வேண்டும். இதுவே பாட்டின்கருத்து.]

## பாட்டு

மண் வளமை செழிக்கத்—தன்னை
வாரி வழங்குகின்ற
தண்முகில் வானத்தைப் போல்—தியாக
சாதனம் செய்திடுவோம்.

2

ஊட்டிப் பயிர் நிலத்தை—வாழும்
உயிர்களுக் குதவிப்
பாட்டுடன் ஓடுகின்ற—நதியெனப்
பாரில் உலாவி வருவோம்.

3

மதுவை வண்டருந்தத்—தன்
மணத்தைக் காற்றருந்தப்
புன்னகை புரியும்—காலைப்
பூவினைப் போலிருப்போம்

4

நீண்டதிரி குறைந்தும்—தனது
நெய்வளமை குறைந்தும்
தூண்டு சுடரினைப்போல்—அருள்
தொண்டினி லின்புறுவோம்.

5

வெட்டும் மனிதருக்கும்—கனி
விருந்துந் தன்னிழலும்
கட்டின்றித் தந்துதவும்—மரம்போல்
தருமஞ் செய்திடுவோம்.

6

இன்னல் அளித்தாலும்—தான்
ஈன்ற குழந்தையினை
அன்னை வளர்ப்பது போல்—நாம்
அன்பை வளர்த்திடுவோம்.

[சுத்தானந்த பாரதியாரால் யாக்கப்பட்ட இப் பாடல் மாஜி பத்திராதிபர் திரு.க. சதாசிவம்பிள்ளையால் அனுப்பப்பட்டது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பக் காட்சிகட் கிறுதியிட்ட சர்ப்பம்

*by. S. Thanapalasingam, Vth Form B.*

ஒருநாள் காலை 7 மணியளவில் நான் என் நண்பன் இல்லத்தினின்றும் ஒரு துவிச்சக்கர வண்டியில் என் இருப்பிடத்திற்குப் புறப்பட்டேன். எனது இல்லத்தின் வாயிலில் நின்று கதவைப் புடைத்தேன். கதவு திறபட்டது. அதிக இளைப்புற்றபடியால் உட்சென்றவுடன் ஓர் சாய்வு நாற்காலியிற் சாய்ந்தேன். எத்தனை இனிய காட்சிகள் எல்லாம் என்முன் தோன்றின.

ஒரு மக்கை வெளியால் உலாவிக் கொண்டிருந்தபொழுது பகலவன் தன் கிரணங்களை வீசிக்கொண்டு குண திசையினின்றும் மேலே வந்தான்.

பின் ஓர் மான் கூட்டத்தைக் கண்ணுற்றேன். அதிற் கலைமான்களும் பிணைமான்களும் காதலித்துக்கொண்டு அம்புபோற் சென்றன.

என் தலையை நிமிர்த்திப் பின் வானத்தைப் பார்த்தேன். அங்கு புள்ளினங்களைக் கண்ணுற்று வியந்தேன். அவர்கள் வானத்திற் பறந்து செல்லும் மார்க்கத்துக்கு எனது கால்கள் என்னையறியாமற் சென்றன.

ஓர் வேடுவன் எவ்வண்ணம் பட்சிகளைப் பின்தொடர்ந்து செல்வானோ அவ்வண்ணமே நானும் பின்தொடர்ந்தேன். அவைகளின் மத்தியிலோர் கிளியைக் கண்ணுற்று வியந்தேன். "தாரகை நடுவண் தண்மதி யமைந்ததை யொத்திருந்தது"

சற்று நேரத்திற்கெல்லாம் அப்புள்ளினங்களோர் அடர்ந்த வனத்தையடைந்து ஓர் கருவிளமரத்திலோர்கொம்பரிற்றங்கின.

பின்பு இனிய குயிலோசை அம்மரத்தினின்று புறப்பட்டது. அது என் காதிற் பட்டவுடனே நான் வானுலகத்திலிருப்பதாகவெண்ணி யானந்தக் கண்ணீர் சொரிந்தேன். ஆ! அவ்வோசையினினிமையை யாவனெவ்வாறு பகர்வேன்.

என் மனத்திலப்பொழுது மாணிக்கவாசகர் பாடிய குயிற்பத் துதயமாயிற்று. அவைகளையுடனே நான் மனங்குழைந்து, குழைந்து உருகிப் பாடினேன். அதிலொன்று இதுவாகும்.

"தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயிலே யிதுகேள் நீ
வான்பழித் திம்மண் புகுந்து

வான்பழித் திம்மண் புகுந்
தென்னுணர் வதுவாய வொருத்தன்
மான்பழித் தாண்ட மென்னோக்கி
மணாளனை நீ வரக்கூவாய்."

அம்மரக் கொம்பர்களிடை வண்டுகளும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. குரங்குகள் தத்தம் தோன்றல்களை யடிவயிற்றிற் தாங்கியவர்களாய் யிங்குமங்கும் பாய்ந்து சென்றன.

இவ்வினிதைக் காட்சிகளைக் கண்ணுற்றவுடன் அவ்விறைவனின் அருட்பெருக்கத்தை நினைந்து, நினைந்து உருகினேன்.

ஒருபகல், வேளின் வாகனங்களாகிய மயில்கள் தங்களினழகிய நீலக் கண்களுடைய தோகையை விரித்தாடின.

மரங்களிற் பல நிறமுள்ள மலர்கள் மலர்ந்திருந்தன. அவைகள் வள்ளல்கள் போல் மற்றையோர் களிக்குமாறு நறுமணங்களைப் பரப்பிக்கொண்டிருந்தன.

அம்மரங்களின்கீழ் பசும்புற்கள் அடர்த்தியாகப் படர்ந்திருந்தன. அவைகள் பச்சைப் பட்டாடை விரித்தாற்போற் தோன்றின.

அப்புல்லிடையிருந்த புற்றினின்றும் ஓர் சர்ப்பம் தன் படத்தை விரித்து வருவதைக் கண்டேன்.

அப்படத்தினிற் பகலவன் கிரணங்கள் படப் பசும் பொன்போற் காட்சியளித்தன.

அப்பொழுது நான் புற்றிலிருப்பது ஆதிசேடனென்றும், இன்னும் பலவற்றையும் ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது "சீர்" என்ற சப்தம் கேட்டது. அச்சர்ப்பம் என்னை நோக்கித் தலையையுயர்த்தியது. ஒன்றும் செய்யமுடியாதவனாய் அங்குமிங்கு மசையாமல் நின்றேன். அச்சர்ப்பம் என்னை யணுகி என் காலைக் கொத்திற்று.

உடனே நான் "ஐயோ, ஐயோ" வென்றரற்றினேன்.

கண்ணை விழித்தவுடன் நான் கண்டது கனவோ அல்லது நனவோவென்றறிதற்கு மேலே பார்த்தேன். குயிலையும் காணேன், குரங்கையும் காணேன், மயிலையுங் காணேன், மண்ணையுங் காணேன். [illegible]என்முன்பால் நண்பன் வேலாயுதன் முத்துப்போன்ற பற்களைக் காட்டிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகளிற் தெளிந்த ஞானமொழிகள் சில

[இஞ் ஞானமொழிகள் தேர்ந்தெடுக்கப்பட்டவை. ஞானமொழிகள் அனந்தம். இங்கு சிலவற்றையே கூறுகிறேம் வாசித்து யோசித்து இன்புறுக.]

### எவ்வகையானவை

ஞானமொழிகள் வாழ்வுப் பாதையை நேரியதாக்கி, தவருன வழியினைத் தவிர்த்து விடுகின்றன. அம்மொழிகள், பல சிப்பிகளிலுமிருக்கும் சில முத்துக்கள் தோன்றுவதுபோல் சாதாரணமான வழக்க மொழிகளிற் தெளிந்த சில மொழிகளாகவே இருக்கின்றன.

### ஆசைப்பூச்சி

கள்ளிச் செடியைக் கபளீகரம் செய்துவிட்ட வெள்ளைப் பூச்சிபோன்று வாழ்வின் சத்தை ஆசைப்பூச்சி உறிஞ்சி நிற்கும். எங்கனும் பறந்து பறந்து சென்றுகொண்டேயிருக்கும். அதைக் காணுவோர் உடனுக்குடன் அழித்துவிடாவிட்டால்—'அடுத்த வீட்டுக் கொல்லையிற்தானே பூச்சி விழுந்திருக்கிறது; நமக்கென்ன?' என்று குறுகிய நோக்கம் பாராட்டினுல்—நம் வீட்டுச் செடியை அந்தப் பூச்சி விட்டுவிடாது என்பது ஞாபகமிருக்கவேண்டும்.

### தீங்கெனும் பாம்பு

வாழும் வீட்டினிலே, அறையிலே, விஷ ஐந்து நுழைந்துவிட்டால் எவ்வாறு அதனை ஒழிக்கத் துடிதுடிக்கின்றேமோ அவ்வாறே தெருவிலே கிராமத்திலே, நாட்டிலே தோன்றிடும் தீங்குகளையும் ஒழிக்கவேண்டும்.

### மௌன விரதம்

குறைந்த அளவு, வாரத்திற்கு ஒரு முறையாவது மௌனவிரதம் அனுஷ்டிப்பதால் நமக்கு நல்ல பலன் விளையும். எவ்வளவுக்கு வீண்பேச்சைக் குறைக்கிறேமோ அவ்வளவுக்கு வாழ்க்கை சந்துஷ்டி அடையும். உலகிலே விளையும் எத்தனையோ அனர்த்தங்களை நீக்கிவிடலாம்.

### சிந்தித்தல்

சிக்கித்துப் பழகினுல் சீரிய வாழ்வு வாழலாம்; நேரிய சேவை புரியலாம்; மலையசைந்தாலும்மனமசையாமலிருக்கலாம்; தீரராயும் வீரராயும் திறனடையலாம்.

### கவனிக்கவேண்டியது

நான் செய்யவேண்டியதென்ன என்பதே எனது கவனம். மாந்தர் என்ன நினைக்கிறர் என்பதன்று. உலகில் உலகத்தார் எண்ணப்படி வாழ்வது அரிது. தனிமையில் நமது எண்ணப்படி வாழ்வது எளிது.

### பலவகைப்பட்ட அன்பு

பற்றற்ற அன்பு தெய்வீகமானது பற்றுள்ள அன்பு லௌகீகமானது. லௌகீக அன்பு பலவிதம். காதலியிடத்திற் செலுத்துமன்பு காதல். நண்பர்களிடத்திற் செலுத்துமன்பு நேசம். புத்திரர்களிடத்திற் செலுத்தும் அன்பு வாஞ்சை. மனத்தை சம்மியப் படுத்தி பிரமிப்பையுண்டாக்கும் வஸ்துக்களிடத்தில் செலுத்தும் அன்பு பிரேமை. குரு முதலிய பெரியாரிடத்தும் கடவுளிடத்தும் செலுத்துமன்பு பக்தி.

### அன்பின் சக்தி

அன்பு உள்ளத்தையுருக்கும் வெள்ளப்பெருக்கு. என்னை உருக்கும் இன்பப் பெருக்கு. அதனைப்பிடித்து அறையிலடைத்துத் தாழ்ப்பாளிட்டு வைப்பதற்கு எவராலும் இயலாது. அது பெருக்கெடுத்துப் பாய்ந்தோடும் பெருங்கடல்.

### ஈசனே! அருள்வாய்

அஞ்சாத நெஞ்சமும், பயத்தினுற் பணியாத தலையும், எல்லையற்ற அறிவும் கொடுக்கக் கொடுக்க நிறைவன்றிக் குறைவடையா ஞானமும், உலகம் முழுதும் ஒரு குடும்பமென்ற உணர்வும், சோராத ஊக்கமும், நற்சிந்தனைகளும், ஓயாத உழைப்பும், ஆற்றலும், உண்மையான பேச்சும், பாலைவனம்போன்ற கண்மூடி வழக்கங்களிலீடுபடாத மனமும் எனது தேசத்தவர்க்கருள்வாய் ஈசனே—(கவி தாகூரின் பிரார்த்தனை மொழிபெயர்ப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி மத பேதம்

V. A. Balakrishnan Sr. Inter Science.

"சுயராஜ்ஜியம்", 'சுயவசம்' என்று பல ஆண்மகோடிகளின் ஒலி அலைமோதுகின்றது. உலகின் உண்மை விரத்தியாகிகளாம் காந்தி, நேரு முதலியோரின் கூக்குரல், பாரினும் பெரிய பலபாடுகள் யாவும் பாரதத்தாயின் தளைகளைத் தகர்க்கின்றன. என் செயினும் ஒற்றுமைக்காகப் பாடுபட்டாலேசெயமடைவாள் பாரதமாதா. ஆனால் அதற்கு முக்கியத்தடைகளாகி 'சுயராஜ்ஜிய' வெற்றிக்கு முற்றுப்புள்ளிபோடும் முரட்டுப்பேய்களாய் இருப்பவை சாதி மத பேதமென்னும் இரண்டுமென்பது வெள்ளிடைமலை.

தீண்டாமை என்பது பொறாமை போன்ற பெரிய ஆமை. இவ்வாமை சுயநலம் என்னும் உயிர்கொண்டு, சுதந்திரம் என்னும் பெரிய வயலில் உள்ள ஒற்றுமை என்னும் பயிரைவெட்டும் துஷ்டசெந்து. உலகில் பரம்பொருளாகிய அப்பன் படைத்த ஜீவராசிகளில் மானுடரும் ஒருபாலாரன்றோ! இம்மானுடராகிய நாங்களும் அவர் படைப்பன்றி வேறன்று. நாம்யாவரும் அவர் பிள்ளைகள். ஆகையினால் நாம் யாவரும் சகோதரர். எங்கட்கிடையில் உயர்வு தாழ்வு உண்டாகக் காரணமென்! சாதிக் கட்டுப்பாட்டை உண்டாக்கியவன் யார்? சர்வவல்லவன் தான் படைத்தவர் கட்கிடையில் வந்து 'நீவிர் உயர்வு' 'நீவிர் தாழ்வு' என்று கூறினாரா? இல்லை. மும்முறையும் இல்லை. இது மனுஷரால் தங்கள் வசதி லாபம் என்பனவற்றிற்கு ஏற்றவாறு உண்டாக்கப்பட்டனவேயாம்.

உலகில் உள்ள மானுடரை இரண்டாகப் பிரிக்கப்புகின் அவர் குணத்தையே தாரகமாக வைத்துப் பிரித்தல் வேண்டுமென்றே அறிவுறுத்த வண்ணிய ஔவை மூதாட்டியும் "சாதி யிரண்டொழிய வேறில்லை" என்ற வெண்பாவைக் கூறியுள்ளார். நாமும் அதைச்சிந்தித்து நோக்கின் பலவுயிரில் கடவுளையும் தன்னையும், தன்னில் பலவுயிரையும் கடவுளையும் கண்டு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்து தன் கடமையை நிறைவேற்றுபவனே [illegible] பெரியவன். அவ்வித ஒழுக்கமில்லாதவர் தாழ்ந்தோராவர். உலகில் உள்ள சாதிக்கட்டுப்பாட்டை நோக்கின் அதுபோல் விசேஷ வியப்பைக் கொடுக்கக்கூடியது பிறிதொன்றில்லை. ஒருவன் சாதிபேத முறைப்படி கீழ்நிலையிற் பிறந்தும் பணம் உண்டாகி ஆடம்பரத்தில் ஓர் செல்வாசனாய் வாழ்ந்தால் அவன் மேலோனாகக் கருதப்படுகின்றான். உலகிலே கொண்டாடப்படும் பெரியோர் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் எளியநிலையுள்ளோராய்ப் பிறந்தனராயினும் அவர் உயர்நிலை அடைந்தவுடன் சாதிக் கட்டுப்பாடு பஞ்சாகி விடுகின்றது. இதற்குச் சார்பாக இந்து இதிகாசங்களில் பலகாரணங்கள் காணலாம். உலகில் வர்ண சமய சாஸ்திர சம்பந்தமான பலவற்றையும் வகுத்த வியாசர் ஓர் வலைச்சியின் வயிற்றிலன்றோ பிறந்தார்! வால்மீகரும் நீச சாதியினரன்றோ! நாரத மகாமுனிவரும் வண்ணாரச்சிறுவன். ஆதியில் சதா கடவுளுடன் ஐக்கியப்பட்டவன் நந்தச் சாம்பான்.

இவைகளை புத்துநோக்கின் இவை சாதிப்பூட்டிற்கு ஆணிமுறிக்கும் ஆயுதங்களாகின்றன. உண்மையிலே பரம்பொருளே பலசாதிகளிலும் பிறந்து ஞானம்போதித்து உலகை உய்வித்தாரென்றால் சாதிக் கட்டுப்பாட்டின் பொய் வேஷத்தையும் அதன் அஸ்திவாரமில்லாது ஆடும் தன்மையையும் நன்றாய் ஊகிக்கலாம். கீழ்ச்சாதிச் சாம்பான் தொட்ட சுவாமியின் உருவம் பல லட்சரூபா செலவின்பேரில் நன்நிலையடைவதும், வர்ணசாரத்தினால் ராவணன் நன்மையடைவதும் இழிகுலத்தோன் நன்மையடைவதும், சாதிபேதத்தின் பொல்லாப்பையும் பொய்மையையும், "யாவரும் கேளிர்" என்பதின் வன்மையையும் வெளிப்படுத்துமென்பது எளிதில் விளங்கும்.

இனிஇவ்வாறாக, மதவேற்றுமையை நோக்குவோமாக. இது சாதிக்கட்டுப்பாட்டைவிடச் சமூகக்கேடு செய்வதில் குறைந்ததல்ல என்று திடமாகக் கூறலாம். மதவேற்றுமையும் மானுஷ்யமின்றித் தெய்வீகமன்று என்பது பெரியோர் புலனிடை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மதவேற்றுமை என்னும் பிரிவு உண்டாகக் காரணமின்றெனினும் அது உண்டாவது பெரிய வியப்பைக் கொடுக்கிறது.

கடவுள் ஒருவன். எல்லாவிதமான மதங்களையும் சீர்தூக்கி உரைத்துப்பார்த்தால் அவை யாவும் அவ்வுண்மையை வரையறையாக வெளியிடுமென்பதற்கையமில்லை. எல்லாச் சமயங்களிலும் உண்மையில்லாமலில்லை. அவை வெளிவரும் கற்புத்திமதிகள், உண்மைகள் யாவும் ஒன்றே. ஒரு ஊரை நோக்கிச் செல்லும் பல வழிகள் போலப் பல சமயங்களும் ஒரு முடிவையே அடைகின்றன. ஆனால் ஒவ்வொரு மதமும் தன்வழியே சோமன் தென்றல் முதலியவற்றோடு கூடிய இன்பவழியென்றும், மற்ற வழிகளோ பள்ளம், திட்டி, கல், முள் இவை நிறைந்துள்ள துன்பவழியென்றும் கூறுகிற்பன. எல்லாவழிகளிலும் துன்பமும் இன்பமும் உண்டு. யாவும் ஒன்றே. எல்லாம் அவரவர் மனப்பான்மையில் பண்பாகும் என்று உலகம் தோன்றியபோது உண்டான உண்மை ஞானம் 'பகவத்கீதை' வாயிலாக உலகிற்கு வெளிப்பட்டது. ஒரு பிள்ளை தன் தாதையை, அப்பாவென்றும், மற்றது ஐயாவென்றும் இன்னுமொன்று 'டாடி'யென்றும் கூறல்போலப் பல மதங்களும் அம்மதக் கர்த்தர்களின் மனப்பான்மையை உடைத்தாய் உண்டாகியன. அப்பிள்ளைகட்கும் தந்தைக்கும் உள்ள அன்பு மாறுகிருத்தல்போன்று மதங்கட்கும் பெருமானுக்குமிடையில் உள்ள அன்பு அணுவேனும் குறையாது

நிற்க, எச்சமயமேனும் 'புற சமயம் பொய். அதை ஏளனம் செய்' என்று போதிக்கின்றதா? அப்படியாகச் சமயங்கள் போதியாதிருக்க, அச்சமயங்களைப் பற்றும் மாந்தர் போதிப்பது தலையிருக்க வாலாடுவதுபோலாகும். "எவன் எக்கோரத்தில் எப்பொருளை நானெனப் பாவித்து வந்தனை வழிபாடு செய்கிறானோ, அவனுக்கு அக்கோரத்தில் அப்பொருளாக நான் இருந்து அவன் வழிபாடுகளை ஏற்று அருள்புரிவேன்" என்கின்றது கீதை. ஆகவே பேதமையென்! இதை நோக்கி நாம்,

*அண்டத்தை உண்டாக்கி*
*அருமறையும் தாமாகி*
*விண்ணவர்க விசைபாட*
*வீற்றிருக்கும் விஞ்சயனை*
*மண்ணிலே மானிடர்கள்*
*மாற்றியொரு பலவிதமாய்*
*எண்ணியெண்ணி எங்குலரும்*
*ஏனோ பராபரமே!*

என்று கூறலாம். மதபேதமின்றேல் அன்பு பெருகும். அன்புண்டேல் அரனைரண் கிட்டும். ஆகவே "மதமென்னும் குன்றேறி நின்றார் மாண்பு, நிதமேனும் நினைத்தல் அரிது" என்று குறளை மாற்றுவதில் குற்றமென்னை?

இதனாலே சாதிமத பேதமென்னும் பேய்களை அகற்றி, அன்பு, சகோதரம், பக்தி என்பனவற்றை சேய்களாக்கி தழுவி நடப்பின் என்றும் கிட்டா உண்மை இன்பம் நம்மைக் கிட்டி, நாம் என்றும் அன்பராய் வாழ்தற்கையமில்லை.

*உலகின்று உயிர்வாழ்த லரிது—உலகில்*
*அரணில்லார் கரணில்—அரனும்*
*அன்பில் லாரிடை ஆக்கமில்—அன்பரும்*
*இல்லாவார் காதலில்*

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

---

# நால்வரிட்ட போட்டா போட்டி

## வெள்ளைக்கொடி ஈட்டிய வெற்றி

By 'அன்று நின்ற R'

எங்கள் கல்லூரி நாலு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரிவுகட்கு ஒவ்வொரு விதையத்திலும் புள்ளிகள் போட்டு எது திறமென்று பார்ப்பது வழக்கம்.

சென்ற சில நாட்களுக்குமுன் ஓட்டம், பாய்தல் முதலிய விளையாட்டுகளிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டா போட்டி நடைபெற்றது. நாலு பிரிவுகளும் மிகவும் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டன.

நாலு பிரிவுகளும் பரந்த அந்த விளையாட்டு மைதானத்தின் ஓரங்களில் ஒரு நிரைக்குத் தம் கூடாரங்களை அமைத்திருந்தனர்.

கூடாரங்கள் அதிக செலவுடனும் பிரயாசத்துடனும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்தினுச்சியிலும் அந்தந்தப் பிரிவின் கொடி காற்றுடன் கூடி இரைச்சலுடன் பறந்து கொண்டிருந்தது. எல்லாக்கூடாரங்களுக்கும் முதலாக பிரத்தியேகமாகவெளியிடங்களிலிருந்து பார்க்க வருவோருக்கென, ஒரு கூடாரம் கல்லூரி அமைத்திருந்தது. இக்கூடாரமும் மற்றைய கூடாரங்களைப் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு கூடாரத்திலும் இசைத்தட்டுகள் சங்கீத மாரி பொழிந்துகொண்டிருந்தன. பந்தயத்திற் பங்கெடுப்போர் ஆயத்தமாகிக்கொண்டிருந்தனர்.

கல்லூரிக் "கொஸ்தா" நேரமாய்விட்டதென்று வாயிற் குழலை வைத்து ஊதினார். பந்தய பங்காளரும், பந்தயம் நடத்துவோரும் மைதானத்துட் புகுந்தனர்.

மைதானமே ஒரு தனி அழகு. பச்சைப் பட்டாடை விரித்தாற் போல் நிலம் காட்சியளித்தது. பாலிய மரங்களெல்லாம் இளங் கிளைகளுடன் காற்றில் இலைகள் பாடியவண்ணம் கரையோரம் நின்றன. ஒருபக்கம் பலரும், நின்றும் நடந்தும், பார்க்கும் தார்போட்டபாதை ( Road ). ஒருபக்கம் உறுதியான உருண்டு திரண்ட கரும் பனைக்கூட்டம். இன்னோர் பக்கத்திற் சிறுதானியங்கள் விளைந்து நிற்கும் வயல்கள். அடுத்த ஓர் பக்கத்தில் ஆறுதலாய் நித்திய நித்திரையிலாழ்ந்திருப்போர் சடலங்கள் அடக்கம்பண்ணிய சிறு வெளி. இவைகட்கு மத்தியில் மைதானம். மைதானத்தின் மத்தியில் காற்றுடன் கலந்து இன்பமாய்ப் பேசிநிற்கும் கல்லூரிக்கொடி.

எல்லோரும் பார்க்கக்கூடிய ஓர் இடத்தில் ஓர் பெரிய கரும்பலகை நின்றது. ஒவ்வொரு ஓட்டமும்முடிய எல்லோருடைய கண்களும் இந்தக் கரும்பலகையே பார்த்தன. கரும்பலகையில் ஒவ்வொரு பிரிவின் பெயரும் எழுதப்பட்டுப் புள்ளிகளின் மொத்தமும் போடப்பட்டுவந்தது.

ஒவ்வொரு முறையும் கரும்பலகையில் எண்கள் மாற்றப்பட்டதும் கரகோஷங்கிளம்பும். மாற்றினவருக்கோ, தனக்குத்தான் இவ்வளவு கரகோஷமுமென்று நினைத்து இடைக்கிடை வெட்கம்வந்ததாம். கரும்பலகை என்னபாடு பட்டதோ ? கால்களிருந்தால், ஆளில்லாமற் தவிக்கும் அதிபர் பங்களாவில் நுளைந்திருக்கும்.

பந்தயங்களின் நடுவில் ஓய்வு நேரம் என்ற சிறு ஆறுதல் நேரமெல்லோர்க்கும் கொடுக்கப்பட்டது. சிற்றுண்டி எல்லோர்க்கும் வழங்கப்பட்டது. 'அது வெல்லுமிது வெல்லும்' என்றெல்லாம் வாய்ப்பந்தயங்கள் பல பக்கங்களிலும் கிளம்பின.

திரும்பவும் நிகழ்ச்சிகளாரம்பமாயின. இப்பொழுது நகர்க்காவலர் படை உதவித் தலைவன் திரு. சொய்சாவும் வந்து சேர்ந்தார். ஆனால், தேநீர் இடைவேளைக்குப் பின் வந்தமையால் தேநீரை இழந்திருக்க வேண்டும். எப்படியோ அவரும் மிகவும் உற்சாகமாக நின்றார்.

கடைசி நிகழ்ச்சி, கயிற்றிழுவைப் போட்டி : கிச்சுக்கொக் பிரிவினர் அதிலும் வெற்றி வீரராய்த் திகழ்ந்தனர். முதற்தொடங்கிக் கடைசிவரை கிச்சுக்கொக் பிரிவிலே கூடிய புள்ளிகள் உடையோராயிருந்தனர். அவர்கள் வெள்ளைக்கொடி வர வர மிதந்து மிதந்து உற்சாகமாகப் பறந்து கொண்டிருந்தது. ஆபிரகாம் பிரிவினர் முதலிடமெடுக்க விடாது தொடர்ந்து துரத்தினர். ஆனால் "கிச்சுக்கொக்" விடாது முன்னேறிக்கொண்டேயிருந்தது.

பந்தயங்கள் முடிவடைந்தன. பரிசுகள் வழங்கப்பட்டன.

வெள்ளைக்கொடி வீரரே வெற்றி வின்ணர்கள் என அறிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டங்களும் கரகோஷங்களும் அபரிமிதமாகக் கிளம்பின. வெள்ளைக் கொடிக்கு ஜே! ஜே! என்று கர்ச்சித்தனர். ஒரு மூலையிலிருந்து ஒருவர்

"வெள்ளைக் கொடியதுசென்று பறந்திடவே
—அதன்கீழ்
நின்று களித்திடுவோம்"

என்று பாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIBRARY.
SEP 14 1942
VADDUKODDAI, CEYLON.

PRINTED AT THE THIRUMAKAL PRESS, CHUNNAKAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org